முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1482

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.10.2023**, வெள்ளிக்கிழமை

1. பரபிரம்மம் தர்ம சொரூபமாக
பரோபகாரமாக இந்த பேருலகில்
வரம்பெற்று அரங்கன் நீ அவதாரம் எடுத்திருக்க
வல்லமைபட வடிவேலன் யானுனக்கு ஆற்றல் கூட்டி
2. தருகின்றேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 03 ம், 20.10.2023, வெள்ளிக்கிழமை)
தக்கபடி அரங்கன் சக்தி இன்னும் பெருக
பெருகவே சுப்ரமணியர் யானும்
புகலுவேன் தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
3. பேருலகில் உலகோரெல்லாம் ஆற்றல்பட
தயவு நெறி கொண்டு
வருங்காலம் ஞானலோகமாக
வல்லமைபட அரங்கன் உன்வழி தீட்சைபெற்று
4. தீட்சைபெற்று சக்தி பெருக்கம் தர
தொடர்ந்து அரங்கன் உன் வழியே
தட்டாது அன்பர்கள் ஏற்று வந்தால்
தரணிக்கு மாற்றம் உண்டு உண்டு
5. இட்டம்போல் அரங்கன் சன்மார்க்கத்தை
எக்கனமும் பின்பற்றி வருதல் காண
கட்டமில்லா உலகமாக இந்த பேருலகம்
கண்டுரைப்பேன் அரங்கன் உன் கருணையாலே மாற்றம் காணும்
6. காணவே அற்புதத்தை கந்தவேலன்
கருணைகொண்டு உன்னுள் இருந்து நடத்துவதால்
ஞானசபை அரங்கன் உன் சபைதான்
நம்பி வந்தால் அன்பர்கட்கு

7. ஞான வாழ்வு ஞாலமதில்
இலகுவாய் எளிதில் சித்திக்கும்
நன்மைகூடி இந்த உலகமும் மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

**–சுபம்–**